1981 மார்ச் 21]

ஏற்படுகிறது. அந்த அதிருப்தியின் அடிப்படையிலே அவர்களுக்கு அவ நம்பிக்கை வருகிறது. மேல் நிலைக் கல்வி தொழிற் பிரிவில் கிட்டத்தட்ட முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகவே அடுத்த ஆண்டிலாவது புத்தகங்களை வழங்க பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எங்களைப் போன்றவர்களுடைய கருத்தின் அடிப்படையிலே எடுக்கப்பட்ட முடிவல்ல இது. தொழிற் கல்விக் கென்று வல்லுநர்களை, ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம். அதற்கென்று அமைக்கப்பட்ட அந்தக் குழுவில் இருக்கின்றவர்கள் கூறிய அபிப்பிராயத் தைச் செயல்படுத்தியிருக்கிறோம். அரசில் இருக்கின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய ஆசியில் எடுக்கப்பட்ட முடிவல்ல இது. பெற்றோர் களுடைய கருத்தையெல்லாம் ஏற்றுக்கொள்வது என்று ஆரம்பித்து நட வடிக்கை எடுத்தால், கல்வித் துறையில் என்னென்ன நடைபெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. பெற்றோர்கள் சொல்லை நாம் கேட்கவில்லை, நம் இஷ்டப்படியும் நடக்கவில்லை. வல்லுநர்கள் சொல்லுவதை ஏற்று செயல்படுத்தியிருக்கிறோம்.

கோடை விடுமுறைகால ஊதியம்.

* 139 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் & திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு எட்டு மாதங்கள் தொடர்ந்து பணிபுரிந்தால்தான் கோடை விடுமுறைகால ஊதியம் வழங்கப்படுகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஆறு மாதம் தொடர்ந்த பணிக்கால அடிப்படையில், அந்த ஊதியம் வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) தனியார் பள்ளி ஆசிரியர்கள் எட்டு மாதம் தொடர்ந்து பணி புரிந்தால்தான் கோடை விடுமுறை கால ஊதியம் 1979-80 வரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1980-81 பள்ளியாண்டு முதல் ஆறுமாதம் தொடர்ந்து பணிபுரிந்தால், தனியார் பள்ளி களில் தற்காலிக ஆசிரியருக்கும் கோடை விடுமுறைகால ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தப் புதிய ஆணையின்படி அந்த ஊதியத்தை வழங்காத பள்ளி ஏதேனும் உண்டா ? அப்படி இருந்தால், அதுபற்றி எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் என்னிடம் இல்லை. அப்படி யாராவது ஆசிரியர்களுக்குக் கொடுக்காமல் இருந்து, அது மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு வந்திருந்தால், அதை என்னிடத்திலே சொல்லலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : இந்த ஆணையை வழங்கியதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு தனியார் பள்ளியிலே சில மாதங்களுக்குப் பணியாற்றிவிட்டு அதையடுத்து வேறு ஒரு தனியார் பள்ளியிலே பணியாற்றும்போது, இரண்டாவது பள்ளியில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் பணிபுரியவில்லை என்ற காரணத்தைக் காட்டி கோடை விடுமுறைகால ஊதியத்தை வழங்க மறுக்கிறார்கள். ஆகவே ஒரு கல்வியாண்டில் மொத்தமாக இரண்டு மூன்று மாதங்கள் பணியாற்றினால் கூட கோடை விடுமுறைகால ஊதியத்தை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரே பள்ளியிலோ, ஒரே மேலாண்மையில் உள்ள பள்ளிகளிலோ வேலை புரிந்தால் மட்டுமே இந்தச் சலுகையைத் தர முடியும். தனித் தனி பள்ளியில் பணிபுரிந்தால், இது கிடைக்காது.

திரு. பா. ரா. தாமஸ் : சில சூழ்நிலைகளின் காரணமாக இடைவெளி இல்லாமல் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு வருகிறார்கள். அப்படிப் பட்ட நிலையில் ஒரே கல்வியாண்டில் மொத்தமாக இடைவெளி இல்லாமல் ஆறு மாதங்கள் பணிபுரிந்திருந்தால், அதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா ? அது குறித்து அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப் பரிசீலிக்கின்ற உத்தேசமில்லை.

செல்வி அ. லீலாவதி : இந்த ஆணை 1980-81 கல்வியாண்டில் வந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கெனவே ஆறு மாதங்கள் பணிபுரிந்தவர்களுக்கு இந்தக் கோடை விடுமுறைகால ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது. 1980-81-க்கு முன்பு ஆறு மாதங்கள் ஆசிரியர்கள் பணிபுரிந்தால், அவர்களுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த உத்தரவு வந்ததிலிருந்து இந்தச் சலுகையை அவர்கள் பெறலாம்.

1981 மார்ச் 21]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அவ்வப்போது தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும் வகையிலே எல்லா ஆணைகளையும் அனுப்பியிருந்தால், இதற்காக தனியாக 'கிளாரிபிகேஷன்' கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. வருங்காலத்திலாவது அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய யோசனை அரசுக்கு இருக்கிறது.

பிறமொழி ஆசிரியர்கள்.

* 140 வினா.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்மொழி அல்லாத அரபி மற்றும் இதர மொழிகளில் முதுகலைத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு, கடந்த சில ஆண்டுகளாக ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

(உ) அந்த ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அப்படிப்பட்ட கோரிக்கைகள் ஏதும் பெறப்படவில்லை.

(இ) எழாது.

(உ) எழாது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Low Income Group Houses

* 141 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Labour be pleased to state the number of taluks in each district, wherein the Tamil Nadu Housing Board has taken up the construction of Low-Income Group Houses?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவர அறிக்கை @ மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 57 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.